**கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் மங்களூர் ஊராட்சி ஒன்றியம், கழுதூர் கிராமம் மற்றும் கழுதூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : ஊராட்சி மன்ற தலைவர் திரு.கா.கருணாநிதி**

தீர்மானம் எண் : 47/2023

நாள்- 20/09/2023

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - கடலூர் மாவட்டம் - திட்டக்குடி வட்டம் - மங்களூர் ஊராட்சி ஒன்றியம் - கழுதூர் கிராமம் ச.எண்.267/2 - இடத்தில் 2.86 ஏக்கர் (அ) 11600.00 ச.மீ – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குதல் குறித்து

பார்வை :

1. மனுதாரர் திரு R.சந்திரசேகர் (ம) இருவர் அவர்களின் விண்ணப்பம் நாள் -28/08/2023
2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் - 04.05.2017.
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No:6XHIEO32/12277/TCP/2023 (ம) மனைப்பிரிவு அனுமதி எண்: ம.வ/ந.ஊ.உ.இ(க.மா)எண் : 88/2023 நாள் - 10.08.2023.
4. சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், வேப்பூர் தானபத்திர ஆவண எண்: 2129/2023 நாள் - 19.07.2023
5. கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது. STATE BANK OF INDIA நாள்: 15/09/2023 மற்றும் E- challan - DTCP - 04/09/2023

உத்தரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - கடலூர் மாவட்டம் - திட்டக்குடி வட்டம் - மங்களூர் ஊராட்சி ஒன்றியம் - கழுதூர் கிராமம் ச.எண்: 267/2 - இடத்தில் 2.86 ஏக்கர் (அ) 11600.00 ச.மீ - பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)-ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டியபடி சாலை, மூலை முடுக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண்: 2129/2023 நாள்: 19/07/2023 - ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் சுட்டியபடி பார்வை (5)-ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நிலப்பயன் மாற்று கட்டணம் 60,000/- STATE BANK OF INDIA, TNPASS KAZHUDUR என்று பெயர் கொண்ட வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு நாள் : 15/09/2023 மற்றும் 16500/- DTCP- E-challan 04/09/2023 உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவுக்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி கழுதூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்: 47/2023 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதல் உடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சமந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின் படி உள்ளாட்சி சட்டங்களின்படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொதுத்துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானபத்திர நகலுடன் சமந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
4. சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு மரம் ஒன்று நட்டு பராமரிக்கப்பட்ட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கழுதூர் கிராமம் ச.எண்.267/2 - இடத்தில் 2.86 ஏக்கர் (அ) 11600.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கழுதூர் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

22/09/2023

கழுதூர் ஊராட்சி ஒன்றியம் ★ மங்களூர் ★
திட்டக்குடி (T.K) கடலூர் (D.T) 606304

**தலைவர்**
**ஊராட்சி மன்றம்**
**கழுதூர்**

திரு.கா.கருணாநிதி ,
ஊராட்சி மன்ற தலைவர், கழுதூர் ஊராட்சி,
மங்களூர் ஊராட்சி ஒன்றியம்,
திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

பெறுநர்
திரு. R.சந்திரசேகர் (ம) இருவர்
ஆரத்தி அக்ரஹாரம் தெரு,
ஆத்தூர்,குமாரபாளையம்,சேலம் மாவட்டம்.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மங்களூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்படுகிறது
நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) கடலூர் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்படுகிறது
நகல் : சார்பதிவாளர் வேப்பூர்
நகல் : வட்டாட்சியர்,திட்டக்குடி

Scanned with OKEN Scanner